# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.57/2022

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் சுப்பையயன் வா.சா.–1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 01–07–2025.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

06.11.2014 ம் தேதியிட்ட என்னுடைய தாயார் பெயரில் உள்ள பட்டா எண்.374 கணினி நகல் **வா.சா.ஆ.1**, 07.04.2022 ம் தேதிய என் பெயரில் உள்ள பட்டா எண்.763 கணினி நகல் **வா.சா.ஆ.2**, 07.04.2022 ம் தேதிய தாவாச்சொத்து சம்பந்தமான வில்லங்க சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.3**, 23.03.2010 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி அதிகார முகவர் நிலையில் 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணையதள நகல் **வா.சா.ஆ.4**, 19.03.2010 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அதிகார முகவர் ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.5**, 26.06.2019 ம் தேதியிட்ட என்னுடைய தாயார் முத்தம்மாள் இறப்பு சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.6**, 31.07.2019 ம் தேதியிட்ட முத்தம்மாளின் வாரிசு சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.7**,

24.09.2008 ம் தேதியிட்ட பட்டா எண்.763 க்கு நான் செலுத்திய தீர்வை ரசீது அசல் **வா.சா.ஆ.8**, 24.09.2020 ம் தேதியிட்ட பட்டா எண்.763 க்கு நான் செலுத்திய தீர்வை ரசீது அசல் **வா.சா.ஆ.9**, 16.11.2020 ம் தேதியிட்ட 1430 பசலியில் நான் பெற்ற பயிர் அடங்கல் அசல் **வா.சா.ஆ.10**, 24.11.2020 ல் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டிற்கு நான் கட்டணம் செலுத்தியதற்கான கணினி நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.07.01 13:31:23 +0530